**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 119/2025**

**PROSECUTION WITNESS - PW7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **முத்துக்குமார்** | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of March 2026.**

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் குற்ற ஆவணக்காப்பக பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு பசுபதிபாளையம் காவல்நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது 01.11.2024 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு நிலையப்பொறுப்பிலிருந்து உதவி ஆய்வாளர் திரு.ரமேஷ், அவர்கள் பதிவு செய்திருந்த நிலைய குற்ற எண்.399/2024, சட்டப்பிரிவு 126(2), 296(பி), 351(3) பா.நி.ச. உ/இ 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம்விளைவித்தல் தடுப்புச்சட்டத்தின் படி பதிவு செய்த வழக்கை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு செய்து 08.11.2024 ஆம் தேதி அரசு தானியங்கி பொறியாளர் திரு.வரதராஜன், அவர்களுக்கு சேதமதிப்பீடு சான்றிதழ் பெற்றும் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய சேத மதிப்பீடு அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.3

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.04.2025 ஆம் தேதி உதவி ஆய்வளார் திரு.ரமேஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் மற்ற சாட்சிகள் கணபதி, வெங்கடேசன், வெற்றிவேல், ஸ்ரீநாத், கிருபாகரன் ஆகியோர்களை விசாரித்தபோது அவர் ஏற்கனவே எனக்கு முந்தையை ஆய்வாளரிடம் சொன்னதைப்போலவே மீண்டும் சொன்னதால் மேற்கொண்டு மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் எனது விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது 02.04.2025 ஆம் தேதி சட்டப்பிரிவு 126(2), 296(பி), 351(3) பா.நி.ச. உ/இ 3(1) தமிழ்நாடு பொதுச்சொத்துக்கள் சேதம்விளைவித்தல் தடுப்புச்சட்டத்தின் படி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சேத மதிப்பீடு கேட்டு நான் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளேன். அந்த வேண்டுகோள் கடிதத்தை இறுதி அறிக்கையுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் வாய்மொழியாகத்தான் சேதமதிப்பீடு கேட்டு சான்றிதழ் பெற்றேன். அ.சா.ஆ.3 சேதமதிப்பீடு அறிக்கையில் கடிதம் எண் இல்லை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் எழுத்துப்பூர்வமான வேண்டுகோள் கொடுக்கவில்லை வாய்மொழியாகத்தான் சேதமதிப்பீடு கேட்டேன். அ.சா.ஆ.3 ஆவணத்தில் கடிதம் எண் இல்லை 13.05.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் தேதி தவறுதலாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ணாடிக்கு தனியாகவும், பீடிங்கிற்கு தனியாகவும், கூலிக்கு தனியாகவும் குறிப்பிடாமல் மொத்தமாகவும் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அதில் ஒட்டு மொத்தமாக குறிப்பிட்டுள்ளதால் தனித்தனியாக குறிப்பிடவில்லை. நீங்கள்கூறியது போல் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மேற்சொன்ன சாட்சிகளை மறு விசாரணை செய்யவில்லை என்றும் மேற்கொண்டு புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.02 18:50:40 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.